# பெருந்தோட்ட அபிவிருத்தி அமைச்சு

## தெங்கு அபிவிருத்தி அதிகார சபை

தெங்கு அபிவிருத்தி அதிகார சபையால் தற்போது வெற்றிடமாக காணப்படும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பதவிகள் தொடர்பாக, தேவைப்படும் அனுபவம் தகைமைகளையும் கொண்டுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து இத்தால் விண்ணப்பங்கள் அழைக்கப்படுகின்றன.

**பதவி – ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்**

**பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை - 08**

தொழில்வகுதி : **முகாமைத்துவ தொழில்நுட்ப உதவியாளர் (MA 2-2)**

சம்பள அளவுத்திட்டம் : ரூ.30,310/-,10x300/-,7x350/-,4x600/-,20x710/-=52,360/- (Ma2-2 2016) மாதாந்தம்)+ அனுமதிக்கப்பட்ட அரசாங்க கொடுப்பனவுகள்

**தகைமைகள் (வெளிவாரி)**

**01. கல்வித் தகைமைகள்**

சிங்களமொழி/தமிழ்மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் ஆங்கில பாடங்களுக்கு பெற்றுக்கொள்ளப்பட்ட நான்கு (04) திறமைச் சித்திகளுடன், க.பொ.த (சாதாரண தரம்) பரீட்சையில் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

மற்றும்

க.பொ.த (உயர்தரம்) பரீட்சையில், ஒரே அமர்வில் விஞ்ஞான துறையில் அனைத்து பாடங்களிலும் சித்தியடைந்திருத்தல் வேண்டும் (பொது வினாத்தாள் தவிர்ந்தது)

அத்துடன்

**02. தொழில்நுட்பத்திறன்கள்/தேர்ச்சிகள்**

மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டவாறாக பதவிக்கு உரித்தான குறிக்கப்பட்டுள்ள தொழில்நுட்பத்திறன்களில் தேசிய தொழில்சார் தகைமையின் மட்டம் -05ஐப் (NVQ -05) பூர்த்தி செய்யும், இலங்கை திறந்த பல்கலைக்கழகம் அல்லது அரசாங்க தொழில்நுட்ப பயிற்சி நிறுவகம் அல்லது ஏனைய அரசாங்க அல்லது தனியார் நிறுவகத்தால் நடாத்தப்படும் உரித்தான துறையிலான ஒரு வருடத்திற்கு குறையாத தொழில்நுட்ப டிப்ளோமா அல்லது ஒரு சான்றிதழ் பாடநெறியை கற்றிருத்தல் வேண்டும்.

உரித்தான துறையில் ஒரு (01) வருடத்திற்கு குறையாத அனுபவத்தை கொண்டிருப்பது ஒரு மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும்.

**வயது** - விண்ணப்பதாரர்கள், விண்ணப்ப முடிவுத்திகதியன்று 18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

அரசாங்கத் திணைக்களம்/மாகாண அரசாங்க/அரச கூட்டுத்தாபனங்கள்/நியதிச் சபைகள் மற்றும் தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையில் ஏற்கனவே நிரந்தரமாக தொழில்புரியும் விண்ணப்பதாரர்களுக்கு இந்த உயர் வயதெல்லை ஏற்புடையாகாது.

**தகைமைகள் (உள்வாரி)**

பதவிக்கு உரித்தானதாக மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு மூன்றாம் நிலை/தொழில்சார் கல்வி நிறுவனத்தினால் வழங்கப்பட்ட தேசிய தொழில்சார் தகைமைகள் (NVQ) மட்டம் 5இற்கு குறையாத தேர்ச்சிச் சான்றிதழொன்றை பெற்றிருத்தல் வேண்டும்.

**ஆட்சேர்ப்பு முறை :** எழுத்துமூல போட்டிப்பரீட்சை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகத்தேர்வு

**அனுகூலங்கள்**

01. 1983 இலக்கம் 12 சட்டத்தின் கீழாக பணிக்கொடை
02. ஒரு, பதவி நிலையினர் மருத்துவ காப்புறுதித்திட்டம் மற்றும் தனிப்பட்ட விபத்து காப்புறுதித்திட்டத்தின் கீழான காப்பீடு
03. ஊழியர் சேமலாப நிதியம் (EPF) ஊழியர் -10% தொழில் வழங்குநர் 15% மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கான (ETF) தொழில் வழங்குநரின் பங்களிப்பு 3% ஆகும்.
04. அதிகார சபையின் ஊழியர்களுக்கான ஏனைய அனுகூலங்களுக்கும் ஏற்புடையதாகும்.

விண்ணப்பதாரின் தற்போதைய தொழில் விபரங்கள், காலப்பகுதியுடன் முன்னர் வகித்த பதவிகள் மற்றும் உறவினரல்லாத சிபாரிசு செய்யும் நடுவர்கள் இருவரின் பெயர் மற்றும் முகவரி, என்பன உள்ளடக்கப்பட்டு, மற்றும் பிறப்புச்சான்றிதழ், கல்வி தொழில்சார் சான்றிதழ்கள் மற்றும் தொழில் சான்றிதழ்களின் பிரதிகளுடன் விண்ணப்பதாரரின் ஏனைய அனைத்து விபரங்களுடன் கூடியதாக விண்ணப்பதாரரின் விண்ணப்பங்கள், 2020.10.22 அன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவி குறிப்பிடப்படல் வேண்டும்.

அரசாங்கத் திணைக்களங்கள்/மாகாண அரசாங்க சேவை/அரச கூட்டுத்தாபனங்கள்/நியதிச் சபைகளில் தொழில்புரியும் ஊழியர்கள் தமது விண்ணப்பங்களை, உரித்தான தமது நிறுவனத் தலைவர்கள் ஊடாக அனுப்பி வைக்க வேண்டியதுடன் ஏற்கனவே தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையில் நிரந்தரமாக தொழில்புரியும் விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை, அதிகார சபையின் உரித்தான பிரிவு தலைவர்கள் ஊடாக அனுப்பி வைக்க வேண்டும்.

முடிவு நேரத்திற்குப்பின்னர் அனுப்பப்படும் அல்லது மேலே குறிப்பிடப்பட்டுள்ள சான்றிதழ் பிரதிகளை கொண்டிராத அல்லது திணைக்கள/நிறுவக தலைவர்கள் ஊடாக அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

CDA இணையத்தளமான www.cda.gov.lk இலிருந்தும் இந்த விளம்பரத்தை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

**தலைவர்,**
**தெங்கு அபிவிருத்தி அதிகார சபை**
**இல.54, நாவல வீதி,**
**நாரஹேன்பிட்டி,**
**கொழும்பு 05**